## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2025 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 10-ஆம் நாள், திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 குரோதி வருடம் தை மாதம் 28-ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.04/2024 இன் அ.வ.எண்.68/2019**

1) ஜெயா

2) ஜான்சி

3) மல்லிகா ... மனுதாரர் /வாதி

/எதிர்/

1) பால்கனி அம்மாள்

2) ராஜன்

3) செல்வன்

4)செல்வராஜ்

5) ஜான்சன்

6) சந்திரபிரபா

7) அலிஸ்ரூபி

8) பாரதி

9) திலகர்

10) சுபாஸ்கர்

11) செல்வன்

12) லாயிட் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.10 17:20:51 +0530

இம்மனுவானது 01.02.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆனந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், 8 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், 10 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசுவாமி அவர்கள் ஆஜராகியும், 1,7,9,11,12 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்யும் விதத்தில் அசல் வழக்கை மீண்டும் திறக்க வேண்டி பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் ஏற்கனவே மனுதாரர்களுக்கு 3/8 ல் பாகம் நட்பு திட்பு பார்த்து பாகம் பிரித்து தரக் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்களை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் போது பிராதில் 10 வது பராவில் மனுதாரர்களுக்கு பாதி பாகம் உள்ளதாக பிராதில் சொல்லப்பட்டதாக பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கேட்கும்போது தவறாக தட்டச்சு செய்யப்பட்டது தெரியவந்தது. ஆதலால் மேற்படி வழக்கில் சீர்திருத்த மனு தாக்கல் செய்ய வேண்டியிருப்பதால் மேற்படி வழக்கை மீண்டும் (ரீ ஓப்பன்) செய்ய அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.10 17:20:59 +0530

**2.8 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரரது மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. சீர்திருத்தம் கோரிய மனு பிராது பாரா 10ல் 2வது வரியினை மட்டும் சீர்திருத்தம் செய்ய கேட்கப்பட்டுள்ளது. ஆனால் பிராது பரிகார காலத்திலேயே வாதிகளுக்கு 1/2 பாகம் உரிமை இருப்பதாக கேட்கப்பட்டுள்ளது. இதனை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபோல் இந்த எதிர்மனுதாரர் தபசில் சொத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கதவு எண்கள் 30A, 30B, 30C, 30D, 30E, 30F, 30G, 30H, மற்றும் 30I என்ற 9 வீடுகள் கட்டியுள்ளார். மேற்படி வீடுகள் குறித்து பிராது சொத்து விவரத்தில் தெரிவிக்கப்படவில்லை. மேற்படி வீடுகளின் மதிப்பு ஒரு கோடிக்கு மேலாகும். அதனை மறைத்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். தபசில் சொத்து குறித்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் தாக்கல் செய்த இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் கூறும் சீர்திருத்த விபரம் தவறு. மனுதாரர்களை வா.சா.ஆ.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது. முதல் விசாரணை சாட்சியத்திலும் பக்கம் 5ல் வாதிகளுக்கு பாதி பாகம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி விவரம் தவறு. அதனை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. 10 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தை பொறுத்து 28.03.2012 தேதியிட்ட ஆவண எண்.1323/2012 ஆக பதிவு செய்யப்பட்ட பாகவிஸ்தி பத்திரம் மூலம் 1 முதல் 5 பிரதிவாதிகள்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.10 17:21:07 +0530

சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் 3ம் பிரதிவாதி செல்வன் என்பவருக்கு ஒதுக்கீட செய்யப்பட்ட சொத்தை இந்த எதிர்மனுதாரர் 18.11.2013 ல் கிரையம் பெற்று அதில் வீடுகள் கட்டி தனித்து அனுபவம் பெய்து வருகிறார். அதுபோல் இந்த எதிர்மனுதாரர் தபசில் சொத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கதவு எண்கள் 30A, 30B, 30C, 30D, 30E, 30F, 30G, 30H, மற்றும் 30I என்ற 9 வீடுகள் கட்டியுள்ளார். மேற்படி வீடுகள் குறித்து பிராது சொத்து விவரத்தில் தெரிவிக்கப்படவில்லை. மேற்படி வீடுகளின் மதிப்பு ஒரு கோடிக்கு மேலாகும். அதனை மறைத்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். தபசில் சொத்து குறித்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் தாக்கல் செய்த இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் கூறும் சீர்திருத்த விபரம் தவறு. மனுதாரர்களை வா.சா..1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது. முதல் விசாரணை சாட்சியத்திலும் பக்கம் 5ல் வாதிகளுக்கு பாதி பாகம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி விவரம் தவறு. அதனை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரர்களை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் போது பிராதில் 10 வது பராவில் மனுதாரர்களுக்கு பாதி பாகம் உள்ளதாக பிராதில் சொல்லப்பட்டதாக பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கேட்கும்போது தவறாக தட்டச்சு செய்யப்பட்டது

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.10 17:21:16 +0530

தெரியவந்தது. ஆதலால் மேற்படி வழக்கில் சீர்திருத்த மனு தாக்கல் செய்ய வேண்டியிருப்பதால் முடிக்கப்பட்ட அசல் வழக்கை மீண்டும் திறக்க வேண்டியுள்ளது அவசியமாக உள்ளது.

அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யபட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், மனுதாரர் தரப்பை மீண்டும் திறக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

இறுதியாக, இம்மனுவானது ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் ரூ.500/-யை 8 வது எதிர்மனுதாரருக்கும், ரூ.500/-யை 10 வது எதிர்மனுதாரருக்கும் நேரடியாக 27.02.2025 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 28.02.2025.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் வருடம் ஜனவரி மாதம் 10-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.10 17:21:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.10 17:21:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.45/2024 இன்

அ.வ.எண்.68/2019

தேதி.10.02.2025